# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2019

| தரம் : 08 | சுகாதாரமும் உடற்கல்வியும்<br>சுட்டெண் : ........................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற 400m ஓட்டப்போட்டியில் அபினாஸ் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் வென்றான். இவ்வீரன் பாடசாலைச் சமூகத்தினால் கௌரவிக் கப்பட்டான். இது வெளிக்காட்டுவது
    1) சுயமுயற்சி 2) திறமை
    3) சுயகௌரவம் 4) அற்பணிப்பு

02. ஒரு அணிநடைக் குழுவில் அங்கம் வகிக்கும் மாணவர் எண்ணிக்கை யாது?
    1) 25 2) 20
    3) 24 4) 30

03. பணித்தல் திறனுடன் ஆரம்பிக்கப்படும் விளையாட்டு எது?
    1) கபடி 2) உதைபந்து
    3) கரப்பந்து 4) வலைப்பந்து

04. பின்வரும் ஓட்ட நிகழ்வுகளில் நின்ற புறப்பாட்டைப் பயன்படுத்தும் ஓட்ட நிகழ்வுகள் எவை?
    1) 1500m, 100m 2) 200m, 100m
    3) 1500m, 5000m 4) $4 \times 400$m, 400m

05. குறிப்பிற்குச் செல் என்ற கட்டளைக்குச் செயற்படும் போது எமது உடலின் எத்தனை பாகங்கள் நிலத்துடன் தொடர்புபட்டிருக்கும்?
    1) 02 2) 03
    3) 04 4) 05

06. ஆரோக்கியமான பாடசாலைச் சூழலில் காணப்பட வேண்டிய அம்சம் எது?
    1) சுத்தமான குடிநீர் 2) தூய்மையான வளி
    3) பாதுகாப்பான சூழல் 4) மேற்கூறிய யாவும் சரி.

07. வழி விளையாட்டின் மூலம் மேம்படுத்தப்படும் சமூகத் தகைமை எது?
    1) களைப்பைத் தாங்கும் ஆற்றல். 2) விளையாட்டில் ஆர்வம்.
    3) சுய ஒழுக்கம் 4) குழு உணர்வு விருத்தி.

08. உதைபந்து மற்றும் கரப்பந்து விளையாட்டில் ஈடுபடும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
    1) 15, 12 2) 11, 6
    3) 10, 11 4) 12, 07

09. காற்றில் நடத்தல் நுட்பமுறை எந்த விளையாட்டுடன் தொடர்புபட்டது?
    1) 100m 2) உயரம் பாய்தல்
    3) நீளம் பாய்தல் 4) குண்டு பாய்தல்


kalvi.lk

10. எத்தனை நாட்களுக்கு ஒரு முறை மாதவிடாச் சக்கரம் நடைபெறுகின்றது?
1) 12
2) 20
3) 28
4) 25

11. அணிநடை மரியாதையின் போது கண்வலம் பார் (Eyes right) என்ற கட்டளைக்கு நேரே பார்த்துச் செல்பவர் யார்?
1) வலது முன் வரிசை வீரர்
2) வலது பின் வரிசை வீரர்
3) இடது முன் வரிசை வீரர்
4) இடது பின் வரிசை வீரர்

12. பாடசாலைக் கிணறு மற்றும் பொது இடங்களுக்கு வழங்கப்படும் நீரின் தரத்தை பரிசோதிப்பவர் யார்?
1) பொலீஸ்
2) வைத்திய அதிகாரி
3) கிராம அலுவலகர்
4) பொது சுகாதார பரிசோதகர் (PHI)

13. பிரதான விளையாட்டுக்களின் திறன்களை விருத்தி செய்வதற்காக நிர்மாணிக்கப்படும் விளையாட்டுச் செயற்பாடு எது?
1) பெருவிளையாட்டுக்கள்
2) சிறுவிளையாட்டுக்கள்
3) வழி விளையாட்டுக்கள்
4) கிராமிய விளையாட்டுக்கள்

14. பின்வருவனவற்றுள் எது பாலியல் மூலம் கடத்தப்படும் நோயாகும்?
1) சிபிலீசு
2) நீரிழிவு
3) ஸ்கேவி
4) மரஸ்மஸ்

15. ஒரு பெண் தாய்மையடைவதற்கு ஆகக் குறைந்த வயதெல்லை யாது?
1) 18 வயது
2) 20 வயது
3) 45 வயது
4) 16 வயது

16. வலைப்பந்தாட்ட மைதானத்தின் நீள, அகலம் முறையே
1) 30m, 15m
2) 30.5m, 15.25m
3) 18m, 9m
4) 90m, 45m

17. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
1) கரப்பந்து
2) எல்லே
3) கிரிக்கட்
4) காற்பந்து

18. தலையால் பந்தை அடிக்கும் திறனைக் கொண்ட விளையாட்டு எது?
1) கரப்பந்து
2) காற்பந்து
3) வலைப்பந்து
4) எல்லே

19. நடைபெற்று முடிந்த உலக கிண்ண கிரிக்கற் போட்டி எந்த நாட்டில் நடைபெற்றது?
1) இங்கிலாந்து
2) யப்பான்
3) அவுஸ்ரேலியா
4) ஆபிரிக்கா

20. உலகில் அதிக ரசிகர்களைக் கொண்ட விளையாட்டு எது?
1) கிரிக்கற்
2) கூடைப்பந்து
3) டெனிஸ்
4) காற்பந்து

( 20 × 2 = 40 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන


kalvi.lk

## பகுதி - II

பின்வரும் வினாக்களில் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

**01.** விமலன் தான் கல்வி கற்கும் பாடசாலை சுகாதார மேம்பாடுடையதாகவும் கல்வி மற்றும் விளையாட்டுத் துறையில் மாவட்ட மட்டத்தில் முதல் நிலைவகிப்பதாகவும் கூறினான். அது மட்டுமல்லாது டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்திலும் சிறந்து விளங்கிய பாடசாலையாகும்.

1) சுகாதார மேம்பாடு என்றால் என்ன?

2) சிறந்த பாடசாலை பௌதீகச் சூழலில் காணப்படும் சிறப்பம்சங்கள் 4 தருக.

3) பாடசாலையில் மேற்கொள்ளப்பட்டுள்ள சுகாதார மேம்பாட்டுக் கொள்கைகள் 3 தருக.

4) கழிவகற்றும் தொட்டிகளின் நிறங்களைக் குறிப்பிட்டு, அதில் இடப்படும் பொருட்களை ஒழுங்காகத் தருக.

5) சமூகத்தால் பாடசாலைக்கு ஆற்றப்படும் பணிகள் 2 தருக.

6) தனியாள் தேர்ச்சிகள் 2 தருக.

( 2 × 6 = 12 புள்ளிகள்)

**02.** 1) வழி விளையாட்டு என்றால் என்ன?

2) வழி விளையாட்டுக்குரிய விசேட இயல்புகள் 3 தருக.

3) வழி விளையாட்டில் ஈடுபடுவதனால் கிடைக்கும் உளம்சார்ந்த நன்மைகள் 3 தருக.

4) நீர் அறிந்த கிராமிய விளையாட்டுக்கள் இரண்டும் சிறுவிளையாட்டுகள் இரண்டும் தருக.

( 3 × 4 = 12 புள்ளிகள்)

**03.** 1) பொலிபோல் விளையாட்டு மைதானத்தை வரைந்து அதன் அளவுகளை குறித்துக் காட்டுக.

2) வலைப்பந்தாட்டத்தில் பந்தை இருகையால் அனுப்பும் முறைகள் 2 தருக.

3) காற்பந்தாட்டத்தில் பந்தை தலையால் அடிக்கும் முறைகள் எவை?

4) பந்தை தலையால் அடிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?

( 3 × 4 = 12 புள்ளிகள்)

**04.** 1) ஓட்ட நிகழ்ச்சிகளை தூர அடிப்படையில் வகைப்படுத்துக.

2) பதுங்கிப் புறப்பாட்டின் வகைகளைக் குறிப்பிடுக.


3) ஓட்ட அப்பியாசங்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?

4) பதுங்கி புறப்பாட்டிற்கு இரு உதாரணமும் நின்று புறப்பாட்டிற்கு இரு உதாரணமும் தருக.

( 3 × 4 = 12 புள்ளிகள்)


kalvi.lk

05.




1) நீளம் பாய்தலுக்கான படிமுறைகள் எவை?

2) நீளம் பாய்தலுக்கான பயிற்சி முறைகள் இரண்டைக் குறிப்பிடுக.

3) நீளம் பாய்தலில் காணப்படும் மூன்று நுட்பங்களும எவை?

( 3 × 4 = 12 புள்ளிகள்)

06. 1) கருக்கட்டல் என்றால் என்ன?

2) இனப்பெருக்க சுகாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகள் எவை?

3) பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாவதால் ஏற்படக் கூடிய பிரச்சினைகள் 3 தருக.

4) பாலியல் நோய்களுக்கு மூன்று உதாரணம் தருக.

( 3 × 4 = 12 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# GRADE 6,7,8

STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**TAMIL MEDIUM**

850/= Monthly

**ENGLISH MEDIUM**

1000/= Monthly

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடாக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page